| சாட்சி : PW 1<br>ராஜ் | அ.வ.எண். 380/2010 | 24.10.2024 |
|---|---|---|

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

3) மனை எண்.68 ன் கிழமேல் அளவுகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, அதேபோல் மனை எண்.69 யை பற்றியும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். RM சிதம்பரம் பிள்ளை தான் பெரியசாமி பிள்ளைக்கு மனை எண்.68 மற்றும் 69 கிரையம் செய்து கொடுத்தார் என்றால் இல்லை. மனை எண்.68 மற்றும் 69 ன் கிழமேல் அளவுகள் தென்புறம் 70 என்றாலும் வடபுறம் 72 என்றாலும் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது சொத்து கிழமேல் ஜாதியடி 35, தென்வடல் ஜாதியடி 36 ஆகும் என்றால் சரிதான். எனது மனைக்கு மேற்கில் 6 அடி பாதை என்றால் எனது கிரைய ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல குறிப்பிடப்பட்டுள்ளது.

4) என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தில் மனை எண். 68 ல் உள்ள பாதையில் எனக்கு உரிமை உள்ளது என்று எழுதப்பட்டுள்ளதா என்றால் எழுதப்பட்டுள்ளது. நான் சொல்வது போல் எனக்கு உரிமை உள்ளது என்று வா.சா.ஆ.1 ஆவணத்தில் எழுதப்படவில்லை என்றால் சரியல்ல. நான் கிரையம் பெறும் காலத்தில் மனை எண்.68 மற்றும் 69 யை கிரையம் பெற்றவர்கள் எனக்கு பாதையை பொறுத்து எழுதிக்கொடுத்துள்ளார்களா என்றால் கலியபெருமாள் எழுதிக்கொடுத்துள்ளார். நான் சொல்வது போல் மேற்படி பாதையை எனக்கு உரிமை உள்ளதாக கலியபெருமாள் எந்த ஆவணமும் எனக்கு எழுதிக்கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தங்களது சொந்த பணத்தை கொண்டு கிழமேல் வடபுறம் 72 தென்புறம் 70 கிரையம் பெற்ற காரணத்தினால் எனக்கு பாதை கொடுக்க வேண்டிய அவசியம்

இல்லை என்றால் சரியல்ல. மனை எண்.68 மற்றும் 69 பிரதிவாதிகளுக்கு சொந்தமான சொத்து என்றாலும் அதில் எனக்கு பாதை கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் சரியல்ல. எனக்கு சொந்தமான சொத்தின் புதிய சர்வே எண் என்னவென்றால் நியாபகம் இல்லை. மனை எண்.68 மற்றும் 69 ன் உரிமையாளர்கள் தங்களுக்கு பாதை வேண்டும் என்பதற்காக தான் பாதை ஒதுக்கியுள்ளார்கள் என்றாலும் அதன் காரணமாக தான் மேற்படி பாதை எனது கிரைய ஆவணத்தில் நான்கெல்லை விபரத்தில் குறிப்பிட்டுள்ளப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல, பொதுமக்கள், பள்ளிக்கு செல்லும் மாணவர்கள் பயன்பாட்டிற்காக மேற்படி பொதுபாதை ஒதுக்கப்பட்டுள்ளது. நான் சொல்வது போல் பிரதிவாதிகளின் கிரைய ஆவணத்தில் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக பாதை ஒதுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மனை எண் 68 ன் உரிமையாளர்கள் தனது வசதிக்காக தான் பாதை ஒதுக்கியுள்ளார்கள் என்றாலும் எனக்காக பொதுபாதை ஒதுக்கவில்லை என்றாலும் சரியல்ல, அரசாங்கத்திற்காக பொது பாதை ஒதுக்கியுள்ளார்கள் அதை நான் 30 ஆண்டுகளாக அனுபவம் செய்து வருகிறேன். நீதிமன்றத்தில் வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்து தாவா சொத்தை பார்வையிட்டால் நான் சொல்வது போல் பாதை உள்ளதா என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான்.

5) நான் எந்தெந்த சர்வே எண்களில் பாதை உள்ளது என்பதை நிரூபணம் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் அரசாங்கத்திற்கு பணம் செலுத்தி சொத்தை அளந்துள்ளேன். மனோன்மணியம்மாள்க்கு தென்வடல் கீழ்புறம் 25 அடி மேல்புறம் 30 ஆகும். மேற்படி மனோன்மணியம்மாளுக்கு வடபுறம்

கிழமேல் 36 தென்புறம் 35 என்றால் வடபுறம் 36 தென்புறம் 36 ஆகும். ஜெயகுமார் இடத்ததில் சுவர் எழுப்பி விட்ட காரணத்தினால் மனோன்மணிக்கும் ஜெயக்குமாருக்கும் பிரச்சனை ஏற்பட்டதா என்றால் இல்லை. மனோன்மணி மேல்புறம் தனது அத்தில் கிழமேல் 36 அடியில் மேல்புறத்தில் சுவர் எழுப்பி 2ம் பிரதிவாதி இடத்தை ஆக்கிரமிக்க முயற்சி செய்த காரணத்தினால் 2ம் பிரதிவாதிக்கும் மனோன்மணிக்கும் பிரச்சனை ஏற்பட்டு அதை பொறுத்து மேல்புறப்பகுதிக்கு வரமாட்டேன் என்று சொல்லி உறுதிமொழி பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி விபரம் எனக்கு தெரியும் என்றாலும் அதை தெரிந்து கொண்டு தான் தற்போது பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற இடத்திற்கு வடபுறம் மனோன்மணி, 2ம் பிரதிவாதி இடத்தை ஆக்கிரமித்துள்ள காரணத்தினால் மேல்புறத்தில் மனோன்மணி எந்த பாதையும் விடவில்லை என்றால் சரியல்ல, மேற்படி பாதை அரசு பாதை ஆகும், மேற்படி பாதை இல்லை என்று சொல்வதற்கு மனோன்மணியம்மாளுக்கு அதிகாரம் இல்லை. மேற்படி பாதை அரசாங்கத்திற்கு சொந்தமானது என்பதை காட்ட ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் கொடுக்கவில்லை தேவைப்பட்டால் வாங்கி தாக்கல் செய்கிறேன்.

6) தாவா பி மற்றும் சி பட்டியல் சொத்தில் எந்த மனை எண்ணில் பாதை உள்ளது என்று குறிப்பிட்டுள்ளனோ என்றால் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளோம். மேற்படி விபரத்தை எனது வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன், மனை எண் 68 ல் 4 அடியும் மனை எண்.67 2 அடியும் சேர்த்து 6 அடி பொது பாதை என்று குறிப்பிட்டுள்ளேன். எந்தெந்த மனை எண்ணில் எவ்வளவு அளவுகளில்

பாதை உள்ளது என்று எனது வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. பூஸ்துதியில் நான் சொல்வது போல் பாதை இல்லாத காரணத்தினால் தான் நான் வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. மனை எண்.68 பிரதிவாதிக்கு உரிமையானது என்றாலும் அதில் எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் அரசாங்கத்தால் பாதை என்று குறிப்பிட்டிருந்தாலும் அதை பாதையாக உரிமை கோர எனக்கு அதிகாரம் இல்லை என்றாலும் சரியல்ல.

7) நான் இல்லாத சந்தை இருப்பதாக சொல்லிக்கொண்டு அதை அனுபவம் செய்து வருவதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது வரை எங்கள் வீட்டிற்கு தென்புறத்தில் உள்ள தெருவின் வழியாக மேற்கில் சென்று மீண்டும் வடக்கில் வந்து தான் மெயின் ரோட்டிற்கு சென்று வருகிறேன் என்றால் 500 அடி சென்று சுற்றி தான் எனது சொத்திற்கு வருகிறேன், மேற்படி பாதையை திறந்து விட வேண்டும். தனிப்பட்ட நபர் அமைத்துள்ள பாதையில் எனக்கு பாதை கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றாலும் அதனால் நான் தாக்கல் செய்துள்ள வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.